Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/41**

Paper 4 Texts **October/November 2018**

**2 hours 30 minutes**

No Additional Materials are required.

*6335021136*

**READ THESE INSTRUCTIONS FIRST**

An answer booklet is provided inside this question paper. You should follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper ask the invigilator for a continuation booklet.

Answer **three** questions, each on a different text. You must choose **one** question from Section 1, **one** question from Section 2 and **one other**.
Write your answers in **Tamil**.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.

You should write between 500 and 600 words for each answer.
All questions in this paper carry equal marks.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் விடைகள் எழுதுவதற்கு ஒரு புத்தகம் கொடுக்கப்படும். அதில் முன்பக்கத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எழுதி இருப்பதைப் பார்த்து அதன்படி செய்யவும். விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க. மேலும் உங்களுக்கு விடை எழுதுவதற்குப் பேப்பர் தேவையாக இருந்தால் மேற்பார்வையாளரிடம் கேட்கவும்.

ஏதாவது மூன்று கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.
விடைகளைத் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைப் பயன்படுத்தக் கூடாது.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.

நீங்கள் ஒவ்வொரு விடையையும் 500 முதல் 600 சொற்களுக்கு இடையில் எழுத வேண்டும்.
எல்லா விடைகளுக்கும் சமமான மதிப்பெண்கள் கொடுக்கப்படும்.

விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க.

This document consists of **7** printed pages, **1** blank page and **1** Insert.

DC (SC) 156347/1
© UCLES 2018


CAMBRIDGE International Examinations

**[Turn over**

https://xtremepape.rs/

**விடைகள் எழுதும் புத்தகத்தில் செய்ய வேண்டியவை**

விடைகள் எழுதும் புத்தகத்தின் முன் பக்கத்தில் எல்லாப் பெட்டிகளிலும் எழுதவும்.
கருநீலம் அல்லது கருப்புப் பேனாவால் எழுதவும். எந்த பார்க்கோட்டிலும் எழுதவேண்டாம்.
விடைகளை விடைகள் எழுதும் புத்தகத்தில் எழுதவும். பேப்பரின் இரண்டு பக்கமும் எழுதவும்.
ஒவ்வொரு கேள்வியின் விடைகளுக்கும் இடையில் இரண்டு இடங்கள் விடவும்.
நீ விடை அளிக்கும் கேள்வியின் நம்பரை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீ எழுதும் கேள்வி பகுதிகளாக இருந்தால் உதாரணமாக 1a, கேள்வியின் பகுதியை இரண்டாவது மார்ஜினில் எழுதவும். இரண்டாவது விடை எழுதும் புத்தகம் வாங்கி விடை எழுதி இருந்தால் அதையும் முதல் புத்தகத்துடன் சேர்த்து வைக்கவும்.

© UCLES 2018

https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2018



https://xtremepape.rs/

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.

**பகுதி 1**

**1 ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a) அகநானூறு, (மாமூலனார், பாடல் 187)**

தோள் புலம்பு அகலத் துஞ்சி நம்மொடு
நாள்பல நீடிய கரந்து உறை புணர்ச்சி
நாண் உடை மையின் நீங்கி சேய்நாட்டு
அரும்பொருள் வலித்த நெஞ்சமோடு ஏகி
நம் உயர்வு உள்ளினர் காதலர் கறுத்தோர்
தெம்முனை சிதைத்த கடும்பரிப்புரவி
வார்கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்
புலம்புறும் கொல்லோ தோழி! சேண் ஓங்கு
அலந்தலை ஞெமையத்து ஆள்இல் ஆங்கண்
கல் சேர்பு இருந்த சில்குடிப் பாக்கத்து
எல்விருந்து அயர, ஏமத்து அல்கி
மனை உறை கோழி அணல்தாழ்பு அன்ன
கவைஒண் தளிர கருங்கால் யாஅத்து
வேனில் வெற்பில் கானம் காய
முனை எழுந்து ஒடிய கெடுநாட்டு ஆர்இடை
பனைவெளிறு அருந்து பைங்கண் யானை
ஒண்சுடர் முதிரா இளங்கதிர் அமையத்துக்
கண்படு பாயல் கைஒடுங்கு அசை நிலை
வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி
நாள்வேட்டு எழுந்த நயன் இல் பரதவர்
வைகு கடல் அம்பியில் தோன்றும்
மைபடு மாமலை விலங்கிய சுரனே?

© UCLES 2018


https://xtremepape.rs/

(i) மேற்கூறிய பாடலில் கடும்பரிப் புரவி, வன்கண் மழவர் ஆகிய சொற்களின் பொருள் என்ன?

(ii) பிரிவினைத் துயரை மாமூலனார் எப்படி வருணிக்கிறார் என்பதை முழுப்பாடலையும் கருத்திற்கொண்டு எழுதவும். [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம், இளங்கோ அடிகள்**

'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் ஆம்' – என்னும் கருத்தை வழக்குரை காதையில் இளங்கோ எங்ஙனம் விளக்குகிறார்? [25]



https://xtremepape.rs/

**2 திருக்குறள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
கற்றதானா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்
மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்
வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

**(i)** மேற்கூறிய குறள்களில் நற்றாள், இடும்பை என்ற சொற்களின் பொருள் என்ன?

**(ii)** கடவுள் வாழ்த்திலுள்ள மேற்கூறிய நான்கு குறள்களிலும் ஏனைய ஆறு குறள்களிலும் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்துகளை தொகுத்துத் தரவும். [25]

**அல்லது**

**(b)** அன்பு என்னும் பண்பு அவசியம் என்று பத்து குறள்களில் வள்ளுவர் எப்படியெல்லாம் வலியுறுத்துகிறார்? [25]



https://xtremepape.rs/

3 தேவாரம் - அப்பர்

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** நெஞ்சம்உமக் கேஇட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றொடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே

**(i)** 'வயிற்றொடு துடக்கி முடக்கியிட நஞ்சாகி வந்தென்னை நலிவதனை' – என்று திருநாவுக்கரசர் வருந்தியது ஏன்? இந்தப்பதிகம் பாடிய சூழ்நிலையையும், பின்னர் நடந்தனவற்றையும் எழுதவும்.

**(ii)** மேற்கூறிய பாடலில், நஞ்சு, கரந்தும் - ஆகிய சொற்களின் பொருள் என்ன? [25]

**அல்லது**

**(b)** திருவதிகை வீரட்டானப் பதிகத்தில் பக்திச் சுவை இருக்கிறதா? உங்கள் கருத்தை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கவும். [25]

© UCLES 2018

https://xtremepape.rs/

## பகுதி 2

**4 இக்காலக் கவிதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a) பாரதியார்**
'கண்ணன் என் தாய்' என்னும் கவிதையில் பாரதியார் கண்ணபிரானை தாயாக வருணிப்பது பொருந்துமா? உங்கள் கருத்தை தொகுத்து எழுதுங்கள். [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**
தென்றல் என்ற கவிதையில் பாரதிதாசனின் சொல் வளத்தையும், இலக்கிய நயத்தையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். [25]

**5 நாவல், பால்மரக் காட்டினிலே, அகிலன்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** அகிலன் எழுதிய பால்மரக் காட்டினிலே நாவலில், தியாகத்தின் சின்னமாக பாலன் விளங்குகிறார் என்பது சரியா? உங்கள் கருத்தை தக்க எடுத்துக்காட்டுகளுடன் நிலைநாட்டுங்கள். [25]

**அல்லது**

**(b)** பால்மரக் காட்டினிலே நாவல் மூலம் ரப்பர் தோட்டத் தொழிலாளர் நிலை பற்றி நீங்கள் அறிவது என்ன. [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** மண்ணும் மாடியும் கதை வாயிலாக நா.பார்த்தசாரதி விளக்கவரும் கருத்து என்ன? [25]

**அல்லது**

**(b)** புதுமைப் பித்தன் எழுதிய ஞானகுகை கதையில் வரும் உங்களுக்குப் பிடித்த அம்சங்கள் என்ன? ஏன்? [25]

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



https://xtremepape.rs/